**நீலகிரி மாவட்டம் சார்பு நீதிமன்றத்தில் 2023-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 26-ஆம் நாள் சாட்சியாகிய-** பாஸ்கரன் **என்பவரின் வாக்குமூலம் 1969- ஆம் ஆண்டு 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி திரு.பிரவீன்குமார் நிலை 2 பெஞ்ச் கிளார்க் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/ சத்திய பிரமாணம் செய்விக்கப்படுகிறது**.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பாஸ்கரன் | மதம் | : |
| தந்தை./கணவர் பெயர் | : | ஜாதி | : |
| கிராமம் | : | தொழில் | : |
| தாலூக்கா | : | வயது | : |

**O.S.** 100/2018 (**P.W.**02 )

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது கூடலூர் LIC ல் கிளை மேலாளராக பணிபுரிகிறேன். நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கவந்துள்ளேன். அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை எடுத்து வந்துள்ளேன். பாலிசி எண்.7666203919 என்ற பாலிசியை சின்னசாமி என்பவர் பெயரில் எடுக்கப்பட்டுள்ளது. 2008 ஆம் வருடம் மேற்படி பாலிசி துவங்கப்பட்டது. மேற்படி பாலிசியில் நாமினியாக (1) பாப்பாத்தி,(2) சந்தோஷ் (3) ரஞ்சித் ஆகியோர் பெயர்கள் உள்ளது. மேற்படி பாலிசி தொகையை சின்னசாமி இறந்தபிறகு 03.08.2016 ஆம் தேதியில் வழங்கினோம். அந்த மொத்த தொகையும் பாப்பாத்தி என்பவருக்கு வழங்கினோம். மேற்படி பணத்தை மனைவி என்ற முறையில் பாப்பாத்திக்கு வழங்கினோம். பாப்பாத்திக்கு ரூ.1,81,773/- ஐ வழங்கினோம். சின்னசாமி பாப்பாத்தியை தனது மனைவி என்று பாலிசி எடுத்துள்ளதால் நாங்களும் பாப்பாத்திக்கு தொகை கொடுத்தோம். பாலிசி நகல் X-1 . பணம் வழங்கப்பட்டதற்கான ஆவணங்கள் X-2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பணம் பெற்றபோது ஸ்டாம்பின்மீது மூன்றுபேரும் கையொப்பமிட்டார்கள். சந்தோஷ், ரஞ்சித் ஆகியோர்கள் பாப்பத்தியிடம் பணம் கொடுக்க ஒப்புக்கொண்டு கையொப்பமிட்டார்கள்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவில்லை.**